# மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2024

| தரம் :- 12(2025) | கிறிஸ்தவ நாகரிகம் | நேரம் : மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

அறிவுறுத்தல் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

❖ மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.

01) நாகரிகத்தைக் குறித்துப் பேசக் கூடிய காலமாக கொள்ளப்படுவது
(1) கி.மு 40,000 (2) கி.மு 8000 (3) கி.மு 14000 (4) கி.மு 2500 (5) கி.மு 4000

02) நாகரிகத்தின் இயல்புகளாக கருதப்படுவது
(1) சுதந்திரம், சனநாயம், சமத்துவம், சமபங்கேற்பு, சுயநிர்ணயம்
(2) அன்பு, இரக்கம், பொறுமை, விட்டுக்கொடுப்பு
(3) பண்பாடு, கலை, கலாசாரம், பொருளாதாரம்
(4) சனநாயகம், சுயமதிப்பீடு, கலாசாரம், பொருளாதாரம்
(5) சனநாயகம், சுயநிர்ணயம், கலாசாரம், பொருளாதாரம்

03) நாகரிகத்தின் அடிப்படை அம்சமாகக் கொள்ளப்படுவது
(1) கலை (2) கலாசாரம் (3) பண்பாடு (4) ஒழுக்கம் (5) சமயம்

A- ஒரு கடவுள் நம்பிக்கை
B- உடன்படிக்கை வாழ்வு, எபிரேய விவிலிய நூல்கள்
C- யூதவிழாக்கள், பலிகள், ஆலயவழிபாடுகள்
D- எகிப்திய கட்டடக் சிற்ப வேலைகள்
E- யூத சமயத்தில் காணப்பட்ட சமயச் சடங்குகள்

04) இக்கூற்றுக்களில் யூத சமயத்தின் எக் கூற்றுக்கள் கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின
(1) ABC (2) BCD (3) CDE (4) ABCD (5) ABCE

05) யூத சட்டங்களை செயல் வடிவமாக்கி புதிய நெறியின் நிறுவுனராகவும் புதிய கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்திற்கு அடிப்படையுமானவர்
(1) ஆபிரகாம் (2) ஈசாக் (3) இயேசுக்கிறிஸ்து
(4) ஆதாம் (5) மோசே

06) வுல்கத்துஸ் என்பதன் பொருள்
(1) பொதுமை, மேன்னை (2) பொறுமை, எளிமை
(3) பொதுமை, எளிமை (4) பொறாமை, மேன்மை
(5) நன்மை, தீமை



kalvi.lk

07) கீழ் தரப்பட்டுள்ள சமூக அமைப்பில் உரோமய சமூக அமைப்பின் இரு பெரும் பிரிவுகளைக் குறிப்பது.

A. பிளேப்பியன்ஸ் B. பிளிப்பைன்ஸ் C. பற்றீசியன்
D. இத்தாலியன்ஸ் E. உரோமயன்ஸ்

(1) Aயும் Bயும் (2) Bயும் Cயும் (3) Cயும் Dயும் (4) Dயும் Eயும் (5) Aயும் Cயும்

08) கிரேக்கரின் ஆட்சிக்காலத்தில் சாதாரண மக்கள் பேசிய மொழி

(1) இலத்தீன் (2) கொய்னே (3) கிரேக்கம் (4) அரமெயம் (5) எபிரேயம்

09) A- நகரம் B- காடு C- அரண்மனை
D- வயல் E- மண்டபம்

நகர் என்ற சொல்லுடன் தொடர்புடைய சொற்கள்.

(1) A, B, C (2) B, C, D (3) A, C, E (4) E, D, C (5) A, D, E

10) இஸ்ராயேலர் அசீரியரின் ஆட்சியின் கீழ் வாழ்ந்த காலம்

(1) 300 ஆண்டுகள் (2) 200 ஆண்டுகள் (3) 100 ஆண்டுகள்
(4) 50 ஆண்டுகள் (5) 500 ஆண்டுகள்

11) திருவிலிலியத்தில் மெகிதே புல்வெளி என்றும் இஸ்ரியேல் புல்வெளி என்றும் அழைக்கப்படும் சமவெளி

(1) எஸ்திரலோன் சமவெளி (2) சாசோன் சமவெளி
(3) பெலிஸ்திய சமவெளி (4) செப்பெல்லோ சமவெளி
(5) ஆக்கோ சமவெளி

❖ **பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 12 - 16 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A- சாரோன் சமவெளி B- எஸ்திரலோன் சமவெளி
C- கெலிஸ்திய சமவெளி D- செப்பேலா சமவெளி
E- ஆக்கோ சமவெளி

12) இன்றைய நவீன நகரமான ரெல் - அவில் இதன் தென் பகுதியில் அமைந்து காணப்படுவதோடு யோப்பா நகரமும் அமைந்து காணப்படுவது.

(1) A (2) B (3) C (4) D (5) E

13) எகிப்திலிருந்து விடுதலை பெற்று வந்த இஸ்ராயேலர் சிம்சோன் தாவீது, சாலமோன் போன்றோரின் தலையையில் போராடி கைப்பற்றிய சமவெளி

(1) A (2) B (3) C (4) D (5) E

14) இஸ்ராயேலர் பெலிஸ்தியருக்கு எதிராகவும் ஆசீரியா பபிலோனியருக்கு எதிராகவும் போராடுவதற்கு இராணுவத்தளமாகப் பயன்படுத்தப்பட்ட சமவெளி

(1) A (2) B (3) C (4) D (5) E



kalvi.lk

15) மத்தியதரைக் கடலோரமாய் அமைந்திருந்த புகழ் பெற்ற துறைமுக நகரப்பகுதி, மத்திய தரை, கீழைத்தேச நாடுகளுடன் தொடர்பு கொண்டு 2500 ஆண்டுகளாக வளரும் வளிமையமாகத் திகழ்ந்தது

(1) E (2) D (3) C (4) B (5) A

16) மக்கபேயருக்கும் கிரேக்கருக்குமிடையே யுத்தம் நடைபெற்ற சமவெளியும் தூய பவுல் தமது 3ம் பயணத்தின் போது தரிசித்த சமவெளியும்

(1) A (2) B (3) C (4) E (5) D

17) இஸ்ராயேல் என்ற பெயரைப் பெற்றுக் கொண்ட நபர்

(1) ஆபிரகாம் (2) ஈசாக் (3) மோசே
(4) யாக்கோப் (5) யோசேப்

18) வாக்களிக்கப்பட்ட நாடு, பாலும் தேனும் பொழியும் நாடு என அழைக்கப்பட்ட நாடு

(1) பாலஸ்தீனா (2) எகிப்து (3) மொசப்பத்தேமியா
(4) உரோம் (5) ஜெருசலேம்

19) இறுதி நீதித்தலைவரும் முதல் இறைவாக்கினரும்

(1) ஒத்தானியேல் (2) எசாயா (3) சாமுவேல்
(4) யோசுவா (5) எசேக்கியேல்

20) யுதர்கள் கலப்பு திருமணம் செய்து கொண்டமையால் உருவாகிய புதிய இனம் எது?

(1) கானனேயர் (2) இஸ்ராயேலர் (3) இஸ்லாமியர் (4) சமரியர் (5) எபுசேயர்

($20 + 1 = 20$ புள்ளிகள்)

## பகுதி - II

- ❖ பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும்
- ❖ பகுதி II இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

01)

(1) பண்டைய இஸ்ரயேல் மீது தாக்கம் செலுத்திய நான்கு நாடுகளைப் பெயரிடுக.

(2) கலிலேயப் பகுதியின் புவியியல் அம்சங்கள் நான்கு தருக.

(3) மொசப்பத்தேமியா (யூப்ரட்டீஸ் தைகிரிஸ்) நாகரிகத்தின் பண்புகள் நான்கு தருக.

(4) சீனாய் உடன்படிக்கை பண்புகளை விளக்குக. ($2 + 4 + 6 + 8 = 20$ புள்ளிகள்)

02)

(1) கலிலேயாவின் முக்கிய இடங்கள் நான்கு தருக.

(2) பெத்தானியாவில் இயேசுவுடன் தொடர்புடைய விடயங்கள் நான்கு தருக

(3) எகிப்திய நாகரிகத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.

(4) கிறிஸ்தவ நாகரிகத்தில் உரோமைய வழிபாட்டு முறையின் தாக்கம் பற்றி விளக்குக.

($2 + 4 + 6 + 8 = 20$ புள்ளிகள்)



kalvi.lk

03)

(1) நீதித்தலைவர்கள் நால்வரை குறிப்பிடுக.

(2) நீதித்த்லைவர்களது முக்கியமான பணிகள் நான்கு குறிப்பிடுக.

(3) சாலமோன் அரசனின் ஆட்சியின் சிறப்பினை விளக்குக.

(4) பாலஸ்தீனாவில் கிரேக்க ஆட்சியின் தாக்கம் பற்றி விளக்குக.

($2 + 4 + 6 + 8 = 20$ புள்ளிகள்)

## பகுதி - II

04)

(1) நாகரிகம், பண்பாடு என்பவற்றிற்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள் பற்றி விளக்குக.

(2) கிறிஸ்தவ நாகரிகத்தில் தமிழ் பண்பாட்டின் தாக்கம் எவ்வாறு உள்ளது என்பதினை ஆராய்க.

($10 + 10 = 20$ புள்ளிகள்)

05)

(1) கிரேக்க மெய்யியல் சிந்தனையாளர்களைக் குறிப்பிட்டு அதில் இருவரின் சிந்தனைகளை விளக்குக.

(2) கிறிஸ்தவ நாகரிகத்தில் கிரேக்க மொழி, மெய்யியல் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதினை ஆராய்க.

($10 + 10 = 20$ புள்ளிகள்)

06)

(1) இஸ்ராயேல் மக்களுடைய வாழ்வில் இறைவன் அவர்களை வழிநடத்தி வந்தார் என்பதினை ஆதாரங்களுடன் விளக்குக.

(2) இஸ்ராயேலரின் விடுதலை வாழ்வை மையமாகக் கொண்டு இன்று இறைவன் எவ்வாறு எம்மை வழிநடத்தி வருகிறார் ஆராய்க.

($10 + 10 = 20$ புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page